[1974 சனவரி 23

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, தற்போது கொஞ்ச நாட்களுக்கு முன்னால் முனிசிபாலிடியிலிருந்து ரிடையரான ஆசிரியர்களுக்கு பென்ஷன் முனிசிபாலிடி ரூல்ஸ்படி அமுல்படுத்துவதன் காரணமாக நிறுத்தப்பட்டு விட்டது. 9 மாதமாக நிறுத்தப்பட்டு ரி-பிக்ஸ் செய்யப்படாமல் இருக்கிறது. இப்படி ஏராளமான ஆசிரியர்களுக்கு உடனடியாக ஓய்வூதியம் வழங்க அரசு விரைவாக உத்தரவிடுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, காலத் தாழ்விற்கு என்ன காரணம் என்று கண்டுபிடிக்கப்பட்டு விரைவுபடுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

Gazetted Status to Headmasters of Government High Schools.

* 40 *Q.*—THIRU K. S. GANAPATHI (on behalf of THIRU M. RAJAH IYER): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether the Government propose to accord Gazetted status to all Headmasters of Government High Schools; and

(*b*) if so, the stage at which the matter stands?

அரசு உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கட்கு அரசிதழ் பதிவுத்தரம்

திரு. கே. எஸ். கணபதி (திரு. எம். ராஜா அய்யர் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) அரசு உயர்நிலைப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் அனைவருக்கும் அரசிதழ் பதிவுத்தரம் அளிக்க அரசு கருதியுள்ளதா ?

(இ) ஆமெனில், அச்செயற்குறிப்பு எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) எல்லா அரசு உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களையும் அரசிதழ் பதிவு பெற்றவர்களாக்குவது அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.